1971 ஜூன் 22]

இது நிர்வாக வசதியைப் பொருத்து மட்டுமல்ல, பணத்தைப் பொருத்ததாகவும் இருக்கிறது. அத்தகைய செலவை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுவதற்கு அரசு தயாராயில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சென்ஸஸ் ஆபரேஷன் முடிந்தவுடனே மாவட்டங்களைப் பிரிக்கவேண்டும் என்று யோசனை முன்பு கூறப்பட்டது. அந்த யோசனையை மறு முறையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : When the district of Salem was bifurcated, the districts of Coimbatore and North Arcot also ought to have been bifurcated. Somehow they were left out. Considering the largeness of these two districts, will the Hon. Minister for Revenue be pleased to consider to bifurcate them and form more handy districts?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தருமபுரி பிரிந்ததால் ஏற்பட்ட விளைவினால்தான்—அதில் ஏற்பட்ட பணச் செலவைப் பார்த்த பிறகுதான்—இனிமேல் மேற்கொண்டு பிரிப்பதைப்பற்றி அரசு தயக்கம் காட்ட வேண்டியிருக்கிறது.

சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கல்

*** 21 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : கரும்பாலைகளினுடைய செஸ் நிதியிலிருந்து அந்தக் கரும்பாலை சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குப் பாதைகள் செப்பனிட போன்ற செலவுகளுக்காகப் பணம் ஒதுக்குகிறார்கள். பல்வேறு திட்டங்களை முறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலும் அந்த செஸ் நிதியிலிருந்து வேலைகள் எதுவும் எடுத்துக்கொண்டு செயல்படுவதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி இனிமேலாவது அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, தேசியமயமாக்குவது பற்றியது.

DR. H. V. HANDE : Sir, may I know whether the Government have examined all the different aspects of the sugar industry? Is it not a fact that large quantities of sugar are lying idle and whether it is because of the Central Government's policy? What is the Government going to do about these large stocks? will the Hon. Minister enlighten this House?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசின் கொள்கை என்ன என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அண்மையில் அவர்கள் டீ-கண்ட்ரோல் அறிவித்திருக்கிற காரணத்தால், ஓரளவுக்கு நம்முடைய சர்க்கரை ஆலைகளுக்கு நிவாரணம் கிடைத்திருக்கிறது என்று நாம் எண்ணலாம். ஆனால், பூரணமாக நம்முடைய சர்க்கரை ஆலைகளுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமானால், மத்திய அரசு இதைப்பற்றித் திட்டவட்டமான ஒரு கொள்கையை வகுத்து, இந்திய நாடு முழுவதும் சிமென்ட் தொழிற்சாலைகளை, எப்படி உற்பத்திக்குப் பாதகம் இல்லாது விலையை நிர்ணயித்து அவர்கள் நடத்துகிறார்களோ அதைப் போல, சர்க்கரைத் தொழிற்சாலைகளையும் அவர்கள் நடத்துவதற்கு முன்வரவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தியா பூராவிலும் இருக்கக் கூடிய சர்க்கரை ஆலை அதிபர்கள் விவசாயிகளுக்கு 45 கோடி ரூபாய் வரையிலும் கொடுக்கவேண்டிய பாக்கி இருக்கிறது என்று சமீபத்தில் மத்திய அரசு கொடுத்த பதிலிலிருந்து நான் அறிந்தேன். அம்மாதிரியாகத் தமிழகத்திலும் பாக்கிகள் அதிகமாக இருந்துக்கொண்டிருக்கின்றன. கூட்டுறவு முறையில் இயங்கக்கூடிய சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் மத்திய அரசுக்கு, சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கவேண்டும் என்று சிபார்சை நமது அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய அரசின் கொள்கைப்படி, மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அதற்கான முயற்சிகளில் இப்பொழுது ஈடுபட்டு வருகிறது. இதுவே போதும் என்று கருதுகின்றோம்.

தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள்

** 22. வினா—திரு. நா. வீராசாமி :* மாண்புமிகு தொழில்-துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை Revenue Division களில் Industrial Estate- கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) இன்னும் எத்தனை கோட்டங்களில் அமைக்கப்படவிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) தமிழ்நாட்டில் 33 வருவாய்க் கோட்டங்களில் தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

(இ) மேலும் 15 வருவாய்க் கோட்டங்களில் தொழிற் பேட்டைகள் அமைக்கப்படவிருக்கின்றன.